

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (17.4.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 2025–2026ஆம் ஆண்டிற்கான கலை பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (மு.கூ.பொ.) திருமதி.கவிதா ராமு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் சீ.சௌமியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களை நேற்று (17.04.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலாத் துறை ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களை நேற்று (17.04.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு 2025–2026 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம்!

# மாற்றுத்திறனாளிகளுக்குச் சூட்டப்படும் மகுடம்!

## கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!



முத்தமிழறிஞர்
கலைஞரின் பிறந்தநாள்
செம்மொழித் திருநாள்
என்ற தமிழ்நாடு அரசின்
அறிவிப்பில்
நான் மகிழ்ந்து நிற்கிறேன்

ஆனால்,
கலைஞரே மகிழ்ச்சியடையும்
ஒரு சட்ட மசோதாவைச்
சட்டமன்றத்தில்
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்
முன்மொழிந்திருக்கிறார்

உறுப்புக்குறை
உள்ளவர்களுக்கு
மாற்றுத்திறனாளிகள் என்ற
மரியாதைப் பட்டம்
சூட்டியவர் கலைஞர்

அவர்களுக்கு
உள்ளாட்சி அமைப்புகளில்
பிரதிநிதித்துவம் வழங்குவது
மாற்றுத்திறனாளிகளுக்குச்
சூட்டப்படும் மகுடமாகும்

இது
இயற்கை செய்த தவறுகளை
ஓர் ஆட்சியாளன் திருத்தும்
முயற்சியாகும்

இந்தியா முழுவதுமல்ல
உலகம் முழுவதும்
பின்பற்றத்தக்க
பெருங்கொள்கையாகும்

தங்களைப் பகைவர்களாகக்
கருதிக்கொண்டிருக்கிற
தூரத்து நண்பர்களும்
உள்ளுக்குள் பாராட்டிக்கொள்ளும்
உயர்ந்த பணியாகும் இது



கவிப்பேரரசு
**வைரமுத்து**

## நாட்டின் பொதுச் சொத்துக்களை விற்க மோடி அரசு முடிவு!

புதுடெல்லி, ஏப். 18 - நாட்டின் பொது சொத்துக்களை விற்பனை செய்து 2 லட்சம் கோடி ரூபாய் நிதியை திரட்ட ஒன்றிய பா.ஜ.க., அரசு ஆலோசனை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஒன்றியத்தில் பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க., ஆட்சி அமைந்தது முதலே பொதுத் துறை நிறுவனங்கள் ஒவ்வொன்றாக தனியார் மயமாக்கப்பட்டு வருகின்றன. மேலும், நாட்டின் பொது சொத்துக்களும் விற்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் ஐந்தரை லட்சம் கோடி ரூபாய் நிதியை ஒன்றிய அரசு திரட்டி வைத்துள்ளது.

இந்நிலையில், மேலும் 2 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான பொது சொத்துக்களை விற்பனை செய்ய ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதற்கான நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு தொடங்கி உள்ளதாக கூறப்படுகிறது.

தேசிய நெடுஞ்சாலை, ரயில்வே, நிலக்கரி சுரங்கங்கள் ஆகிய தேசிய சொத்துக்களை விற்பனை செய்யவுள்ளதாக ஒன்றிய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஒன்றிய அரசின் இந்த முடிவுக்கு அரசியல் கட்சிகள் கடும் எதிர்ப்புகளை தெரிவித்துள்ளன.


